உ

# வடந்தை

துகளில்லாத புது உலகம் தோன்றல் வேண்டும் என்போம்

காலம் – 04 | புரட்டாதி – மார்கழி | காற்று – 11




பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடமாகாணம்



**வெளியீடு:**
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்.
தொலைபேசி இல. 0213202990

**ஆலோசகர்:**
திரு.இளங்கோவன்
செயலாளர்,
கல்வி அமைச்சு,
வடமாகாணம்.

**முகவரி:**
பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வலயக் கல்வி அலுவலகம்,
வடமாகாணம்,
யாழ்ப்பாணம்.

**ஆசிரியர் குழு:**
திருமதி என்.ஸ்ரீதேவி
திரு. வி.குணபாலா

# நுழைவாயில்...

இரண்டாயிரத்து பதினொன்றுக்கு
விடை கொடுக்கும் நேரம்......
பழையன கழிதலும் புதியன புகுதலும்
காலவழுவல்ல அவை இயல்பானவை.

தைத்திங்கள் தொட்டு மார்கழி வரையுமான
காலப்பரப்பில் உள்ளூர், வெளியூர்க் கலைஞர்களின்
சங்கமிப்பால் உருவான கலை நிகழ்வுகள் பற்பல...

திணைக்களம் ஆற்றிய பணிகள் வீரியமானவை.
கலாசார உத்தியோகத்தர்கள் ஆற்றிய பணிகள்
காலத்தால் பதியப்பட வேண்டியவை.
புதிய பரிமாணங்களின் வித்துவத்தை எடுத்தியம்பிய
கலைப் பிரம்மாக்களின் ஆற்றல்கள் பிரம்மிக்கத்தக்கவை.

பிறக்க இருக்கும் ஈராயிரத்துப் பன்னிரெண்டை
இருகரம் கூப்பி வரவேற்கிறோம்.
வருக வருக புதிய ஆண்டே
மானிட விழுமியங்கள் மேலோங்கிக் கோலோச்ச ...

"அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் "

# செவ்விசை மாலை






வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள “நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில்” 2011.09.20ம் திகதி மாலை 05.00 மணிக்கு அரங்கு நிறைந்த இசை இரசிகப்பெருமக்கள் மத்தியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணக்கலைஞர்களுடன், தென்னிலங்கை இசைக் கலைஞர்களும் இணைந்து இவ் இசைக் கதம்பத்தினை வழங்கி இருந்தார்கள்.

கலாநிதி நிர்மலாகுமாரி சரத்குமார லியன்னவத்த - புல்லாங்குழல், சுந்தரமூர்த்தி கோபிதாஸ் - வயலின், என்.ஏ.வாகீசன் - வீணை, பேசால அனோஜ் - தபேலா, திரு.மகேந்திரன் லோகேந்திரன் - மிருதங்கம் ஆகிய கலைஞர்கள் இணைந்து பிரமாண்டமான முறையில் தமது இசை ஆற்றலை வெளிப்படுத்தியிருந்தனர். இந் நிகழ்வு கர்நாடக இசையுடன் ஹிந்துஸ்தானிய இசையும் இணையும் களமாக இடம்பெற்றதுடன், பலரது பாராட்டைப்பெற்றுப் புதியதொரு இசை அனுபவத்தினை யும் வந்திருந்த அவையினருக்கு ஏற்படுத்தியதெனலாம்.

## விவசாயக் கண்காட்சி

வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் ஆலோசனைக்கு அமைவாக வடமாகாண விவசாய அமைச்சினால் 2011.09.05ஆம் திகதி தொடக்கம் 2011.09.10ஆம் திகதி வரை விவசாயக் கண்காட்சி நிகழ்வு திருநெல்வேலியில் அமைந்துள்ள விவசாயப் பண்ணையில் நடைபெற்றது.









இக்கண்காட்சியை வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண அமைச்சுக் களின் செயலாளர்கள், திணைக்களங் களின் பணிப்பாளர்கள், விவசாயிகள், விவசாயக் கல்லூரி மாணவர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். கண்காட்சி நடைபெற்ற நாட்களில் காலையில் உளளூர் உற்பத்திகள் தொடர்பான கண் காட்சியும், மாலை யில் இயற்கையால் வடிவமைக்கப்பட்ட விசேட கலை அரங்கில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத் தின் ஒழுங்கமைப்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்ட கலை இலக்கிய மன்றங்களின் 20 மேற்பட்ட கலை நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இக் கலை நிகழ்வுகள் இயற்கையோடு இணைந்த வகையில் ஆற்றுகை செய்யப் பட்டிருந்தன. இந் நிகழ்வை ஏராள மான பார்வையாளர்கள் கண்டு இரசித்தார்கள்.

# T.M. கிருஷ்ணாவின் இசை நிகழ்வு

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், இந்திய துணைத்தூதரகம் - யாழ்ப்பாணமும் இணைந்து தென்னிந்தியாவின் புகழ்பெற்ற சங்கீத வித்துவான் ஸ்ரீ.ரி.எம். கிருஷ்ணா அவர்களின் இசைக்கச்சேரியை வடமாகாணத்தில் மிகச் சிறப்பாக ஒழுங்குபடுத்தி நடாத்தின. அந்தவகையில் 2011.10.02ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்திலும்; 2011.10.03ஆம் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சி மகா வித்தியாலய மண்டபத்திலும்; 2011.10.04ஆம் திகதி வவுனியா நகரசபை மண்டபத்திலும் நடைபெற்றது. அரங்கு நிறைந்த இரசிகர்கள் மத்தியில் மிகச்சிறப்பாக நடைபெற்ற இவ் இசைக்கச்சேரி உள்ளூர்க்கலைஞர்களின் மிகுந்த பாராட்டுதலையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.






சென்னை:

இலங்கையில் உள்ள தமிழர்கள் அங்கு நடைபெற்று முடிந்த போரால் சொந்தம், சொத்து என அனைத்தையும் இழந்திருந்தாலும் தங்களது கலாசாரத்தையும் பண்பாட்டையும் இழக்கவில்லை என கர்நாடக இசைக் கலைஞர் டி.எம்.கிருஷ்ணா தெரிவித்தார்.

அண்மையில் இலங்கையின் பல பாகங்களிலும் இசைக் கச்சேரிகளை நடத்தி முடித்து தற்போது நாடு திரும்பியுள்ள கிருஷ்ணா இந்த இசைப் பயணம் குறித்து தமிழக ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்திருந்தார்.

பக்கவாத்தியங்களாக: கடம் - திரு.கிரிதர் உடுப்பா; கஞ்சிரா - திரு.அலதூர் ராஜகனேஸ்; மிருதங்கம் - திரு.கல்லிடைக்குறிச்சி சிவகுமார்; வயலின் - செல்வி. அக்கரை சுப்புலட்சுமி அவர்களும் மிகசிறப்பான முறையில்; அவையினர் இசையில் லயிக்கும் விதத்தில் தமது வாத்தியங்களை இசைத்தனர்.

இசையின் பல்வேறு நுணுக்கங்களையும், ஸ்வரங்களின் மனோதர்ம ஞானத்தினையும் வந்திருந்த கலைஞர்களைக் கவரும் வகையில் எவ்வாறு சிறப்பாக அளிக்கை செய்வது என்பதனையும் T.M. கிருஷ்ணா அவர்கள் எடுத்துக் காட்டியிருந்தார். மேலும் அவர் "வடமாகாணத்தில் தனக்குக் கிடைத்த ஆதரவு போன்று இலங்கையில் வேறு எங்கும் கிடைக்கவில்லை" என்றும் தெரிவித்திருந்தார்.

# வடமாகாண கௌரவ ஆளுநர் விருது - 2011

தம் வாழ்நாளில் கலைக்கும், தமிழுக்கும் அரும்பணியாற்றிய அறிஞர் பெரு மக்களுக்கு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் தமிழ் இலக்கியப் பெருவிழாவின் நிறைவு நாளில் வடமாகாணத்தின் உயரிய விருதான கௌரவ ஆளுநர் விருது வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வாண்டு மன்னாரில் நடைபெற்ற தமிழ் இலக்கியப் பெரு விழாவில் நிறைவு நாளாகிய 2011.10.14ஆம் திகதி விருதுக்குரிய கலைஞர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்வரும் கலைஞர்களுக்கு 15,000 ரூபா பணப்பரிசிலும், விருதும், பட்டயமும் வழங்கப்பட்டன.







## விருதுபெற்ற கலைஞர்கள்

| | | |
|---|---|---|
| கலாபூஷணம். அன்ரனி பாலதாஸ் | நாட்டுக்கூத்து | யாழ்ப்பாணம் |
| கலாபூஷணம். சுப்ரமணியஆசாரி பாஸ்கரன் ஆசாரி. | சிற்பம். | நல்லூர் |
| கலாபூஷணம். ஞானகுமாரி சிவனேசன் | இசை(வாய்ப்பாட்டு) | உடுவில் |
| சங்கீதவித்துவான். பொன்னுத்துரை சிறிவாமதேவன் | வாய்ப்பாட்டு,வயலின் | சாவகச்சேரி |
| கலாபூஷணம். அகஸ்ரின் வேதானந்தம் | சிற்பத்துறை | தெல்லிப்பளை |
| கலாபூஷணம். விமலலோஜினி கனகேஸ்வரன் | இசை (வயலின்) | வவுனியா |
| திரு.ஐயாத்துரை சண்முகலிங்கம் | சிறுகதை | கரவெட்டி |
| கலாபூஷணம். சூசை சந்தியா | நாட்டுக்கூத்து. | பூநகரி |
| கலாபூஷணம். ஜனாப் அப்துல் காதர் அஸீம் | ஊடகவியல் | யாழ்ப்பாணம் |
| கலாபூஷணம். செபஸ்தியான் மாசிலாமணி. | இசைநாடகம் | மன்னார் |
| திரு.அலெக்சாந்தர் அலெக்ஸ் | நாட்டுக்கூத்து | மடு |
| திரு.இராமு முருகுப்பிள்ளை | நாட்டுக்கூத்து | முல்லைத்தீவு |
| திரு.கப்புராலகே பத்தரால | கிராமியக்கலை (நடனம்) | வவுனியா-தெற்கு |

# நூல் வெளியீடு

## "இலங்கைத் தமிழ் இலக்கியத்திற் பெண்கள்"



கடந்த 2010.10.02ஆம் திகதி தொடக்கம் 2010.10.05ஆம் திகதி வரை கிளிநொச்சியில் நடைபெற்ற வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழாவின் காலை நிகழ்வாக நடாத்தப்பட்ட ஆய்வரங்கத்தில் வாசிக்கப்பட்ட "இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் பெண்கள்" என்னும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வரங்க கட்டுரைகளைச் செம்மைப்படுத்தி தொகுக்கப்பட்டு 2011.10.14ஆம் திகதி மன்னாரில் நடைபெற்ற 2011ஆம் ஆண்டு தமிழ் இலக்கிய விழாவின் ஆய்வரங்கத்தில் நூலாக வெளியிடப்பட்டது. இந்நூல் தொடர்பான வெளியீட்டுரை, ஆய்வுரை என்பன நிகழ்த்தப்பட்டது. இந்நூலிற் பின்வரும் தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டன.





- சுதந்திரத்திற்கு முற்பட்டகாலத் தமிழ் நாவல்களில் பெண்கள்.
- சுதந்திரத்திற்குப் பிற்பட்டகால இலங்கைத் தமிழ் நாவல்களில் பெண்கள்.
- சுதந்திரத்திற்கு முற்பட்டகால ஈழத்துத் தமிழ்க் கவிதைகளிற் பெண்கள்.
- சுதந்திரத்திற்கு முந்திய ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகளிற் பெண்கள்.
- சுதந்திரத்திற்கு பிற்பட்ட கால தமிழ்ச் சிறுகதைகளிற் பெண்கள்.
- நாட்டார் இலக்கியத்தில் காதல் பாடல்களும் பெண்களும்.
- தமிழ் ஊடகங்களிற் பெண்கள்.
- இலங்கைத் தமிழ் ஆய்வில் பெண்கள்.
- ஈழத்து ஒப்பாரிப் பாடல்களும் பெண்களும்.
- ஈழத்தமிழ் இலக்கியத்தில் முஸ்லீம் பெண்களின் பங்களிப்பு.
- பாரம்பரிய மற்றும் நவீன நாடகங்களில் கலைஞர்களாகப் பெண்கள்.

இவ் ஆய்வுகளைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், துறைசார் அறிஞர்கள், கலாசார உத்தியோகத்தர் என்போர் மேற்கொண்டிருந்தனர். ஆய்வரங்கில் பங்குபற்றிய அனைவருக்கும் இந்நூல் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# நவராத்திரி


உலகத்தின் உற்பத்திக்குக் காரணமானதும், உலக இயக்கத்திற்குக் காரணமாக அமைவதும் சக்தியாகும். இச்சக்தியானது பல வடிவங்களில் உலகியல் வாழ்விற்கு அடிப்படையாகின்றது. இத்தகைய சக்திகளில் மனித வாழ்வியலுக்கு மிகமுக்கியமாகத் தேவைப்படுவது கல்வி, செல்வம், வீரம் என்னும் மூன்றும் ஆகும். இச்செல்வங்களை வேண்டி வருடாந்தம் நவராத்திரித் தினங்களில் விசேட நிகழ்வுகள் பல இடம்பெற்று வருகின்றமையை நாம் காணலாம்.

அத்துடன் பல்வேறு குழுமங்கள் கடமைபுரியும் அமைச்சு, திணைக்களங்களில், விழாக்களைக் கொண்டாடுவதற்கான நோக்கம்: ஒவ்வொரு மத விழுமியங் களையும் மற்றைய மதத்தவர் அறிந்துகொள்ள வாய்ப்பளிப்பதற்காகவே. இந்த வகையில் சகல சமய விழாக்களையும் கொண்டாடிவரும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2011ஆம் ஆண்டுக்கான நவராத்திரி விழாவை வடமாகாண கல்வி அமைச்சில் மிக விமர்சையாகக் கொண்டாடியது. இசைக் கச்சேரிகள். ஆன்மீக உரைகள் என்பன இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. நவராத்திரி தினத்தில் சிறுவர்களுக்கான ஏடு தொடக்கும் நிகழ்வு கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இ.இளங்கோவன் அவாகளினால் நடாத்தப்பட்டது.

# "சாபவிமோசனம்" நாட்டிய நாடகம் - 2011

கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 150வது நினைவு தினத்தை முன்னிட்டு வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், இந்திய துணைத்தூதரகம் - யாழ்ப்பாணமும் இணைந்து வழங்கிட 2011.11.28ஆம் திகதி மாலை 03.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் "சாபவிமோசனம்" என்னும் நாட்டிய நாடக நிகழ்வு இடம்பெற்றது.





இந்தியாவில் மிகப் பிரபல்யம் வாய்ந்த கதக்நாட்டிய வித்துவான் திரு.ஆசிம்பாண்டு பட்டார்ஜீ அவர்களும்; மணிப்புரி நாட்டியதாரகை: திருமதி பிம்பாவதிதேவி அவர்களும் இணைந்து இந் நிகழ்வை ஆற்றுகை செய்திருந்தனர்.

ஐதீகக்கதை ஒன்றினை மையப்படுத்தி கதக், மணிப்புரி கலைகளின் சங்கமத்தில் மிகப் பிரமாண்டமான முறையில் இந் நிகழ்வு ஆற்றுகை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. வடமாகாண கல்வி - பண்பாட்டலுவல்கள் - விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரும், வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் செயலா-ளருமான திரு.இ.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு வடமாகாண கௌரவ ஆளுநர்.ஜீ.ஏ.சந்திரசிறி அவர்களும், இந்தியத் துணைத் தூதராலய ஆலோசகர் - யாழ்ப்பாணம் திரு.மகாலிங்கம் அவர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினராக யாழ்.மாநாகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களும், வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்ட,பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் கலைஇலக்கிய ஆர்வலர்கள், இரசிகப்பெருமக்கள் என்போர் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். மேலும் ஆற்றுகையின் நுணுக்கங்களையும், ஆடை அலங்காரத்தினையும், ஒப்பனை நேர்த்தியையும் அவற்றுக்கு அணி சேர்த்தாற்போல் சிறந்த ஒளி அளிக்கையினையும் வந்திருந்த அனைவரும் கண்டு அனுபவிக்கக்கூடியதாக அமைந்திருந்தது.



# மாவட்ட, பிரதேச கலை இலக்கிய விழாக்கள்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுப் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தர்கள்; தாம் கடமையாற்றும் பிரதேசங்களின் கலை இலக்கியச் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கிலும், கலைஞர்களைக் கௌரவப்படுத்தி ஊக்கப்படுத்தும் நோக்கிலும் வருடாந்தம் கலை இலக்கிய விழாக்களைக் கொண்டாடி வருகின்றார்கள். இவ்வாறு நடாத்தப்பட்ட விழாக்களில் சில...













| பிரதேசம் | இடம் | திகதி | தலைமை |
|---|---|---|---|
| நல்லூர் | இளங் கலைஞர் மன்ற கலா மண்டபம் திணைகள அன்பளிப்பு : ரூ 20,000 | 30.09.2011 01.10.2011 | திரு. அ. சோதிநாதன், உதவிப் பிரதேசசெயலாளர், நல்லூர் திரு.பா.செந்தில்நந்தனன், பிரதேச செயலாளர், நல்லூர் |
| பூநகரி | முழங்காவில் மகா வித்தியாலய மண்டபம் | 10.09.2011 | திரு.சு.வசந்தகுமார், உதவிஅரசாங்கஅதிபர்,பூநகரி |
| வடமராட்சி தெற்கு மேற்கு | நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபம் | 25.09.2011 | திரு.சி.சத்தியசீலன், பிரதேசசெயலாளர், வடமராட்சி |
| வவுனியா வடக்கு | பிரதேச செயலகம், வவுனியா வடக்கு | 20.10.2011 | திரு.க.பரந்தாமன், பிரதேச செயலாளர், வவுனியா வடக்கு |
| வடமராட்சி வடக்கு | பர்வதவர்த்தினி கலா மண்டபம் | 05.11.2011 | திரு.இ.வரதீஸ்வரன், பிரதேசசெயலாளர், வடமராட்சி வடக்கு |
| வவுனியா | வவுனியா நகரசபை கலாசார மண்டபம் திணைக்கள அன்பளிப்பு 200 நூல்கள் | 08.11.2011 | திரு.அ.சிவபாலசுந்தரம் பிரதேசசெயலாளர், வவுனியா |
| கரைச்சி | கிளி-மத்திய கல்லூரி மண்டபம் | 14.11.2011 | திரு.கோ.நாகேஸ்வரன் பிரதேசசெயலாளஉ., கரைச்சி |
| கிளிநொச்சி மாவட்டம் | கிளி-மத்திய கல்லூரி பிரதான மண்டபம் திணைக்கள. அன்பளிப்பு -50,000 ரூபா | 15.11.2011 16.11.2011 | உயர்திரு.செ.ஸ்ரீநிவாசன், மேலதிகஅரசாங்கஅதிபர். திருவாட்டி.றூ.கேதீஸ்வரன், அரசாங்க அதிபர் கிளிநொச்சி |
| தெல்லிப்பளை | வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம் மண்டபம் | 29.11.2011 | திரு.சு.முரளிதரன் பிரதேசசெயலாளர், தெல்லிப்பளை |
| கண்டாவளை | கிளி. தர்மபுரம் மகாவித்தியாலயம் திணைக்கள அன்பளிப்பு 200 நூல்கள் | 10.12.2011 | திரு.சி.சத்தியசீலன் பிரதேசசெயலாளர், கண்டாவளை |
| பச்சிலைப்பள்ளி | கிளி. பளை மத்திய கல்லூரி திணைக்கள அன்பளிப்பு 200 நூல்கள் | 24.12.2011 | திரு.த.முகுந்தன் பிரதேசசெயலாளர், பச்சிலைப்பள்ளி |

# வடமாகாண சிறந்த நூற்பரிசுத்தேர்வு - 2010

வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாவருடம் “சிறந்தநூற் பரிசுத்தேர்வு” நடைபெற்று வருகின்றது. இந்தவகையில் 2010ஆம் ஆண்டு வடமாகாண எழுத்தாளர்களால் வெளியிடப்பட்டுப் போட்டிக்கெனத் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெற்ற நூல்கள் துறைசார் நடுவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. அந்தவகையில் 9 எழுத்தாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட எழுத்தாளர்களுக்கு ரூபா 10,000 பெறுமதியான காசோலையும், உயரிய விருதும் மன்னாரில் நடைபெற்ற 2011ம் ஆண்டுக்கான தமிழ் இலக்கியப் பெருவிழாவின் நிறைவு நாளன்று வடமாகாண கௌரவ ஆளுநர் அவர்களினாலும் கௌரவ அமைச்சரினாலும் வழங்கப்பட்டது.










# தமிழ் இலக்கியப் பெருவிழா–2011





வருடா வருடம் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் தமிழ் இலக்கியப் பெரு விழாவானது இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் 14ம், 15ம் திகதிகளில் மன்னார் நகரசபை மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டது. இவ்விழாவானது காலை, மாலை இரண்டு அமர்வுகளாக இடம்பெற்றன. காலையில் நடைபெற்ற ஆய்வரங்கம் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியிலும், மாலையில் நடைபெற்ற கலை நிகழ்வுகள் மன்னார் நகர சபை மண்டபத்திலும் நடைபெற்றன.







ஆய்வரங்கு “சமகால கலை இலக்கியங்களில் பண்பாட்டுக்கோலங்கள்” என்ற கருப்பொருளில் ஆய்வாளர்கள் தமது ஆய்வினை நகர்த்தியிருந்தார்கள். மேலும் இவ் அமர்விற்கு இலங்கையின் பிரபல கவிஞர். சோ. பத்மநாதன் அவர்கள் தலைமை தாங்கினார். ஆய்வரங்க அமர்வில் வடமாகாணத்தின் சகல மாவட்டங்களில் இருந்தும் 400க்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

இலக்கியப் பெருவிழாவின் முதலாம் நாள் மாலை நிகழ்வுகள் “ சவிரியான் லெம்பேட்” அரங்கில் மன்னார் அரசாங்க அதிபர் திரு.நா.வேதநாயகன் தலைமையிலும், இரண்டாம் நாள் மாலை நிகழ்வுகள் "பென்ஜமின் செல்வம் புலவர்” அரங்கில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.இ.இளங்கோவன் தலைமையிலும் நடைபெற்றது. மாலை 01.30 மணிக்கு தமிழர்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும், வடமாகாண மக்களின் வாழ்வியலையும் பிரதிபலிக்கும் வகையில் மன்னார் பெரியபாலத்தில் இருந்து பண்பாட்டுப் பேரணி நகர்ந்தது. விளையாட்டு அரங்கு ஊடாக நகர சபை மண்டபத்தைச் சென்றடைந்தது. இப்பேரணியில் பல கிராமியக் கலைகள் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தன.

“சவிரியான் லெம்பேட்” அரங்கில் 2010ஆம் ஆண்டுக்கான சிறந்த நூற் பரிசுத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள், 2011ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுநர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களுக்கான கௌரவம் வழங்கப்பட்டது. இதில் விருது விபரக் கையேடும் வெளியிடப்பட்டது. இந் நிகழ்வில் கௌரவ கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிசாட் பதியுதீன் அவர்களும்,

வடமாகாண கௌரவ ஆளுநர் ஜி. ஏ. சந்திரசிறி அவர்களும், வடமாகாண பிரதம செயலாளர், வடமாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத்தலைவர்கள், கலைஞர் பெருமக்கள், கலை இலக்கிய இரசிகப் பெருமக்கள், மாவட்ட, பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள், நிதி உதவியாளர், மாகாண சபையில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. வடமாகாணத்தின் சகல மாவட்டங்களில் இருந்தும் வருகை தந்த கலைஞர்களால் கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









## இசைக் கருவிகள் அன்பளிப்பு

வடமாகாணத்தில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் கலை இலக்கிய மன்றங்களின் வினைத்திறனை மேம் படுத்தும் நோக்கில் பின்வரும் கலை இலக்கிய மன்றங்களுக்கு வாத்தியக் கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.




கிளிநொச்சி உருத்திரபுரத்தில் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் "மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்திற்கும்", இணுவில் மேற்கு இணுவிலில் இயங்கிக் கொண்டிருக்கும் வயலின் வாத்தியக் கலையகமான "சங்கமம்" கலை இலக்கிய மன்றத்திற்கும் வீணை, வயலின், தபேலா, ஹார்மோனியம், சுருதிப்பெட்டி, தாளம் போன்ற வாத்தியக் கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# ஒளிவிழா-2011

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடா வருடம் சகல சமயங்களினதும் விழாக்களைக் கொண்டாடி வருகின்றது. இந்த வகையில் கிறிஸ்தவ சமயத்தவர்களின் சிறப்பு நாளாகிய பாலன் பிறப்பை முன்னிட்டு நடைபெறும் ஒளிவிழா நிகழ்வை, இவ்வருடம் 22.12.2011ஆம் திகதி புதன்கிழமை மாலை 04.00 மணிக்கு யாழ்ப்பாணம், திருமறைக் கலாமன்றத்தினருடன் இணைந்து, திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் நடாத்தியிருந்தது.














வடமாகாண கௌரவ ஆளுநர் மற்றும் யாழ்பேராயர், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர். மேலும் யாழ். மாநகர சபை முதல்வர், வண. மீகாகஜன்துரி ஸ்ரீவிமலதேரோ, சர்வதேச புத்தஷாஸன சங்கம், யாழ்ப்பாணம். ஓய்வுபெற்ற முன்னாள் பேராயர், யாழ்ப்பாணம் ஆகியோரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. முதன் முறையாக யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில் வடமாகாண அலுவலர்களின் பிள்ளைகள், இல்லக்குழந்தைகள், தற்காலிக முகாம்களில் வசிக்கும் சிறுவர்கள் எனச் சுமார் 200ற்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு கல்வி கற்பதற்கான உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# வடமாகாண சிறந்த நூற்பரிசுத் தேர்வுப் போட்டி - 2011

வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வருடா வருடம் வடமாகாண எழுத்தாளர்களை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு மேற்படி போட்டிகளை நடாத்தி வருகின்றது. இப் போட்டிக்கான நிபந்தனைகள் பின்வருமாறு:

01. நூல்கள் யாவும் 2011.ஜனவரி.01ஆம் திகதிக்கும் 2011.டிசம்பர்.31ஆம் திகதிக்கும் இடையில் அச்சில் வெளிவந்தவையாகவும், முதற் பதிப்பாகவும் இருத்தல் வேண்டும்.

02. நூலாசிரியர் வடமாகாணத்தின் 05 மாவட்டங்களில் ஒன்றினைப் பிறப்பிடமாகக் கொண்டவராக இருத்தல் வேண்டும். ( யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி )

03. ஒருவர் எல்லாத்துறைப் போட்டிகளிலும் பங்குபற்றலாம். நூலின் ஆசிரியர் ஒருவராக மட்டும் இருத்தல் வேண்டும்.

04. நூலின் 04 பிரதிகள் திணைக்களத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும் .

05. பின்வரும் துறைகளில், போட்டிகள் இடம்பெறும். நூலாசிரியர் தான் எந்தப் பிரிவில் தனது ஆக்கத்தைச் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றார் என்பதைக கட்டாயம் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1.உயர்கல்வி | 3.பல்துறை | 5.சிறுகதை | 7.நாடகம் |
| 2.ஆய்வும் விமர்சனமும் | 4.கவிதை | 6.நாவல் | 8.சிறுவர் இலக்கியம் |

06. நூல்கள் தமிழ் மொழிமூலம் ஆக்கப்பட்டிருப்பதுடன் நூலில் பதிப்பித்த ஆண்டும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

07. நூல்களைப் பதிவுத் தபாலின் மூலமாக அல்லது வலயக் கல்விப் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாக ஒப்படைக்கலாம்.

08. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

09. விண்ணப்ப முடிவுத்திகதி 2012.04.23ஆம் திகதி ஆகும். இத் திகதிக்கு முன்னர் கிடைக்ககூடியதாக பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வலயக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கும் நூற்பிரதிகள் தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

* போட்டிக்காக அனுப்பப்படும் நூல்கள் மீண்டும் கையளிக்கப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு 021-3202990 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

– செயலாளர், கல்வி அமைச்சு.

Harikanan, Jaffna.